முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2014

எனது இல.:DMS/Cir/2014/COLA
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு 01
2014.01.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும்
முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள்

**2014 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க அரசாங்க கூட்டுத்தாபனங்களின், நியதிச்சட்ட சபைகளின் செயற்திட்டங்களின் ஆளணியினருக்கான வாழ்க்கைச் செலவுப் படிக் கொடுப்பனவில் மாற்றங்கள் செய்தல்**

01. 2014 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட வாழ்க்கை செலவுப்படிக் கொடுப்பனவுகளைகீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**02.** அதனடிப்படையில் பின்வரும் (i, ii மற்றும்iii) வகுதிகளில் **உள்ளடங்காத**, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள், 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் கீழ் உள்ளடங்கும் செயற்திட்டங்கள் என்பவற்றின் பதவியணியினர் இக்கொடுப்பனவினைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

i. கூட்டு ஒப்பந்தங்கள் மூலம் அல்லது அவற்றையொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் சம்பளங்கள் தீர்மானிக்கப்படும் நிறுவனங்கள்
ii. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியை அடிப்படையாகக் கொண்ட மாற்றமடையக்கூடிய வாழ்வாதாரக் கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்படும் நிறுவனங்கள்
iii. 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க பதவியணியும் அவர்களுக்கான சம்பளங்களும் **தீர்மானிக்கப்படாத** நிறுவனங்கள்

## 03. வாழ்க்கைச் செலவுப்படி

மேலே இலக்கம் 02 இற்கு இணங்க தற்போது அக்கொடுப்பனவுக்குத் தகைமை பெறுகின்ற , உரித்துடைய பதவியணியினருக்குத் தற்போது செலுத்தப்பட்டு வருகின்ற கொடுப்பனவு 2014.01.01 ஆந் திகதி முதல் ரூபா. 7800/- ஆக அமைதல் வேண்டும்.

## 04. நாளாந்த வேதன அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கான கொடுப்பனவு

அமைய/நாட் சம்பள அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2012.12.10 ஆந் திகதிய 48 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவுப் படிக் கொடுப்பனவு 2014.01.01 ஆந் திகதியிலிருந்து ரூபா. 260/- ஆக அமைதல் வேண்டும்.

## 05. பிழையாகக் கணிப்பிடுதல்

இச்சுற்றறிக்கைக்குப் புறம்பாக எவரேனும் ஆளொருவருக்கு ஏதேனும் ஒரு தொகை மேலதிகமாகச் செலுத்தப்படுமாயின் அதற்கு, குறித்த நிறுவனத்தின் நிதி முகாமையாளர்/ கணக்காளர் தனிப்பட்ட முறையில் பொறுப்புக்கூற வேண்டும் என்பதுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை அவ் ஆள் மீளச் செலுத்தும் கடப்பாடுடையவராவார். அத்தகைய பிழையான சம்பள மாற்றங்களை அல்லது கொடுப்பனவுகளைச் செய்கின்ற உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம் / பீ.பி.ஜயசுந்தர
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. செயலாளர், அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், தேசிய சம்பள ஆணைக்குழு
6. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
7. பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்